செ.வெ.எண்:230 நாள்:07.04.2018

**அருள்மிகு நெல்லையப்பர் அருள்தரும் காந்திமதி அம்மன்திருக்கோவில் திருக்குடமுழுக்கு 27.04.2018 அன்று காலை 09.30-10.25 மணிக்குள் நடைபெறும் - மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.சந்தீப் நந்தூரி இ.ஆ.ப அவர்கள் தகவல்**

- - - - - - -

திருநெல்வேலி மாவட்டம், திருநெல்வேலி நகர் அருள்மிகு நெல்லையப்பர் அருள்தரும் காந்திமதி அம்மன் திருக்கோயிலில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி குடமுழுக்கு நடத்துவது தொடர்பாக 18.03.2018 அன்று மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் திருமதி.வி.எம்.ராஜலெட்சுமி அவர்கள் தலைமையில் திருநெல்வேலி மாவட்ட ஆட்சித்தலைவர், சட்டமன்ற உறுப்பினர்கள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் ஆன்மீக அன்பர்கள் கலந்து கொண்ட கூட்டத்தில் 27.04.2018 அன்று வெள்ளிக்கிழமை அதிகாலை 04.41 மணி முதல் 05.11 மணிக்குள் உத்திர நட்சத்திரமும் மீன லக்னத்தில் திருகுடமுழுக்கு நடத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது என அறிவிப்பு வெளியிடப்பட்டது.

மேற்படி குடமுழுக்கு நடைபெறும் நேரம் அதிகாலையில் இருப்பதால் வயதான முதியவர்கள் மற்றும் குழந்தைகள் கும்பாபிஷேக நிகழ்ச்சியில் கலந்து கொள்ள சிரமமாக இருக்கும். எனவே மேற்படி குடமுழுக்கு நேரத்தினை மாற்றி அமைக்குமாறு பக்தர்கள், ஆன்மீக அன்பர்கள் பெரும்பாலோர் கோரிக்கையாக நிர்வாகத்திடம் வைத்தனர். இதனை பரிசீலனை செய்து திருகுடமுழுக்கு விழா நடத்துவது தொடர்பாக சைவ மடங்களில் தொன்மையான மடமான தருமபுரம் ஆதினம் ஸ்ரீலஸ்ரீ குருமகா சன்னிதானம் அவர்களை திருக்கோயில் நிர்வாகம் மற்றும் நகரில் உள்ள முக்கிய பிரமுகர்களுடன் சென்று கலந்து ஆலோசனை செய்யப்பட்டது. 27.04.2018 அன்று விடியற்காலை 4.41 முதல் 05.11 மணிக்கு நடைபெற இருப்பதை பக்தர்கள் வந்து செல்ல வசதியாக பகல் நேரத்தில் அதாவது சூரிய உதயத்திற்கு பின் கும்பாபிஷேகம் நேரம் வைப்பது சிறப்பாக இருக்கும் என்றும், பக்தர்களுக்கும், பொதுமக்களுக்கும் பயனுடையதாக இருக்கும் எனவும், தருமை ஆதினம் ஸ்ரீலஸ்ரீ குருமகா சன்னிதானம் தனது திருஉளப்பற்றினை தெரிவித்துள்ளார்.

எனவே சைவ ஆதினங்கள், மடாதிபதிகள், பொதுமக்கள் மற்றும் பக்தர்களின் கோரிக்கையின்படியும் எதிர்வரும் 27.04.2018 அன்று நிகழும் மங்களகரமான 1193-ம் விளம்பி வருடம் சித்திரை 14ம் நாள் (27.04.2018) வெள்ளிக்கிழமை உத்திர நட்சத்திரமும், அன்று காலை 09.30 மணிக்கு மேல் 10.25 மணிக்குள் மிதுன லக்னத்தில் திருகுடமுழுக்கு நடத்துவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது என்ற விவரம் பக்தர்களுக்கும், ஆன்மிக அன்பர்களுக்கும், பொதுமக்களுக்கும் மாவட்ட நிர்வாகத்தின் மூலம் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது என மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.சந்தீப் நந்தூரி அவர்கள் தெரிவித்துள்ளார்கள்.

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம்,திருநெல்வேலி